Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 48

செவ்வாய்க்கிழமை
13 ஜனவரி 2026

மார்கழி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## ஓரிரு நாள்கள் மழை தொடரும்

யாழ்ப்பாணம், ஜன. 13
வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை அடுத்த சில நாள்களுக்குத் தொடரும் சாத்தியம் »11






# கார் - பஸ் கோர விபத்து; 4 பேர் பரிதாபச் சாவு!

கிளிநொச்சி, ஜனவரி 13
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முரசுமோட்டைப் பகுதியில் காரும், பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில், நான்கு பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். »11

### வலிகாமம் வடக்கில்

## 2,500 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவில்லை!

### வலி.வடக்கு தவிசாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜனவரி 13
வலிகாமம் வடக்குப் பகுதியில் மட்டும் 2 ஆயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இராணுவத்தால் பயன்படுத்தப்படாத காணிகள்கூட தொடர்ந்தும் ஆக்கிரமிப்பில் உள்ளன - இவ்வாறு வலி.வடக்கு பிரதேசசபை »11

### ஒரே வாரத்தில்

## 67,000 சுற்றுலாவிகள்!

கொழும்பு, ஜன. 13
இந்த வருடத்தின் முதலாவது வாரத்தில், 67 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள் »11

## கடற்படையின் தேவைக்கு காணி சுவீகரிக்கத் திட்டம்!

### அநுர அரசிலும் தொடர்கிறது அடாவடி

யாழ்ப்பாணம், ஜன. 13
யாழ்ப்பாணம் - எழுவைதீவில், தனியாருக்கு சொந்தமான காணிகளை கடற்படையின் தேவைக்காக சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான அளவீட்டுப் பணி எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.
எழுவைதீவில் ஜே/39 கிராம அலுவலர் பிரிவில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான 2 பரப்புக் காணியையும், அதேபோல் மூன்றாம் வட்டாரத்தில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான 53 பேர்ச் காணியையுமே கடற்படையினரின் »11

### திஸ்ஸ விகாரைக்காக

## ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க வேண்டும் ஜனாதிபதி

### வலி.வடக்கு தவிசாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 13
தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அநுரகுமார, தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று வலி. வடக்குப் பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். »11



## யாழில் இருந்து நேரடி ஏற்றுமதி

### ஒத்துழைப்பு வழங்குவதற்கு சுங்கத் திணைக்களம் தயார்

யாழ்ப்பாணம், ஜன. 13
யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடி ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. »11

### உதயனின் ஊடக அனுசரணையில்

## வல்வெட்டித்துறையில் வினோத பட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 13
உதயனின் ஊடக அனுசரணையில், வல்வை உதயசூரியன் கழகமும், வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'வினோத பட்டப் போட்டித் திருவிழா' நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.
வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் »11




### துப்பாக்கி ரவைகளுடன் ஒருவர் கைது

விரிவு பக்கம்:-02

## இலங்கை மீண்டெழுவதற்கு முழுமையான ஒத்துழைப்பு!

### சீன வெளிவிவகார அமைச்சர் வாக்குறுதி

கொழும்பு, ஜன. 13
பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கை, பொருளாதாரத்தில் மீண்டெழுவதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்று சீன வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்துள்ளார்.
சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, இரண்டு நாள்கள் பயணமாக நேற்று இலங்கைக்கு »11

AAA MEDIA SOLUTION (Pvt) Ltd.
EVENT MANAGEMENT
2 நாட்கள் மட்டுமே !
ஏற்பாட்டில்
வல்வை உதயசூரியன் கழகமும்
வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா
நிலையமும் இணைந்து வழங்கும்
வினோத (விசித்திர)
பட்டப்போட்டி திருவிழா 2026
இடம் : வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரை
காலம்: 15.01.2026, நேரம் : பி.ப 1.00 முதல்
சரிகமப பாடகர்கள் மற்றும் பிக்பாஸ் பிரபலங்கள்
கலந்து சிறப்பிக்கும் சுருதிலயாவின் இசை விருந்து.
ஊடக அனுசரணை உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 12.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4314 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 12 33 62 73 |
| விசேட எழுத்து | U |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 12.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1381 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 25 38 52 56 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 12.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0340 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 1 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 12.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2420 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 13 44 70 75 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 12.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6072 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 1 5 9 8 5 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 12.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2102 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 13 35 75 80 |
| விசேட எழுத்து | O |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 12.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0188 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 28 33 57 |

# இலங்கை வந்தடைந்தார் சீன அமைச்சர் வாங் யி



கொழும்பு, ஜன.13

**சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி தனது ஆபிரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை இலங்கை வந்தடைந்தார்.**

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னர் வாங் யி இலங்கைக்கு மேற்கொள்ளும் மிக முக்கியமான பயணமாக இது கருதப்படுகிறது.

இவரது பயணத்தில்'டித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் மறுசீரமைப்புப் பணிகளுக்காக சீனாவால் விசேட நிதி உதவித்திட்டம் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சீன ஆய்வுக்கப்பல்கள் இலங்கைக்கு வருவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் நீண்டகால நெருக்கடியாக தொடர்கின்றன. வாங் யி யின் வருகையில், இந்த விவகாரம் தொடர்பில் இணக்கப்பாடுகள் எட்டப்படும் என்றும் தெரிகின்றது. (ஏ-இ)

## துப்பாக்கி ரவைகளுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜன.13

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 8 துப்பாக்கி ரவைகளுடன் நேற்று முன்தினம் இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய> தகவலின் அடிப்படையில், உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த நபரிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டபோது ரவைகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேராவில் இளங்கோபுரம் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

"துப்பாக்கி ரவைகளை தேராவில் காட்டுப்பகுதியில் எடுத்தேன். அவற்றில் உள்ள வெடிமருந்தை மீன்பிடி நடவடிக்கைக்காகப் பயன்படுத்தவே இவ்வாறு செய்தேன்" என்று சந்தேகநபர் பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-19)

## நாட்டுப் படகுகளில் கச்சதீவுப் பயணம்

### தமிழக மீனவர்கள் கோரிக்கை

இந்தியா ஜன.13

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு தமது பாரம்பரிய நாட்டுப் படகுகளில் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனால் இராமேஸ்வரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற கச்சதீவுத் திருவிழா ஏற்பாட்டுக் கூட்டத்தையும் அவர்கள் புறக்கணித்துள்ளனர்.

கச்சதீவு ஒப்பந்த அடிப்படையில் பாரம்பரிய மீனவர்கள் நாட்டுப் படகுகளில் திருவிழாவுக்குச் சென்று தமது நேர்த்திக்கடன் செய்வதற்கான உடன்பாடு இருந்தது. எனினும் சில வருடங்களாக வணிக ரீதியாக விசைப்படகுகளில் கட்டணம் அறவீடு செய்து, சுற்றுலாப் பயணிகளை அழைத்துச்செல்வது போன்று மாற்றமடைந்துள்ளது. எனவே எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள திருவிழாவுக்கு எமது நாட்டுப் படகுகளில் செல்வதற்கு அனுமதிக்கவேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-27)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 12.01.2026 | திங்கட்கிழமை | 0780 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| X | 3 7 4 1 7 1 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.01.2026 | திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3046 | M | 55 70 79 80 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.01.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| J | 22 31 40 65 | 5207 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 12.01.2026 | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0876 | 07 20 21 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.01.2026 | திங்கட்கிழமை | |
| தனுஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 02 08 21 35 | 4758 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 12.01.2026 | திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 04 | 20 21 23 48 | 2222 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.01.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 06 22 62 73 | 2872 |

## கெஹெலியவின் வழக்கு பெப்ரவரி 13ஆம் திகதி

கொழும்பு, ஜன.13

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, அவரது மகன் ரமித் ரம்புக்வெல, மகள் அமாலி நாயனிகா ரம்புக்வெல மற்றும் அவர்களது பணியாளரான நிபுணி கிருஷ்ணஜினா ஆகியோருக்கு எதிராக இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதிபதி, வழக்கை மீண்டும் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கெஹெலிய ரம்புக்வெல அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், தனது தனிப்பட்ட ஊழியர் குழாமில் வெளிநபர்களின் பெயர்களைச் சேர்த்து, அவர்களுக்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் தனது வங்கிக் கணக்குகளில் வரவு வைத்ததன்மூலம் 'ஊழல்' செய்தமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின்கீழ் அவருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது. (ஏ-இ)



## கல்விச் சீர்திருத்தத்தை எதிர்த்து விமல் வீரவன்ஸ சத்தியாக்கிரகம்!

கொழும்பு, ஜன.13

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்றுக்காலை கல்வி அமைச்சுக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

புதிய கல்வி மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தியும் அவர் இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். (ஏ-இ)

## வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு

புத்தளம், ஜன.13

அதிவேகமாகப் பயணித்த காரும், ஹையஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், காரில் பயணித்த மூவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து புத்தளம்கொழும்பு பிரதான வீதி முந்தலம், நவடன் குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

விபத்தில் இரு பெண்களும், ஒரு ஆணும் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த மேலும் சிலர் சிகிச்சைக்காக சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன உரிமை மாற்றத்துக்கு இனிமேல் 'ரின்' கட்டாயம்!

கொழும்பு, ஜன.13

**வாகனங்களின் உரிமையை மாற்றும்போது, வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் எனப்படும் 'ரின்' இலக்கம் தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இதற்கான சட்ட நடைமுறைகள் கடந்த 5ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் புதிய வாகனங்களை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்வதற்கு மாத்திரமே 'ரின்' இலக்கம் கட்டாயமாக்கப்பட்டிருந்தது. தற்போது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் உரிமையை மாற்றும் போதும் அது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள்கள், கை உழவு இயந்திரங்கள், உழவியந்திரங்கள் மற்றும் முச்சக்கரவண்டிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் இது பொருந்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

## டெங்குத் தடுப்பு களத்தரிசிப்புகள்

சாவகச்சேரி, ஜன.13

பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 'தூய்மையான நாடு ஆரோக்கியமான வாழ்க்கை' எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் மூன்று நாள்கள் டெங்குக் கட்டுப்பாட்டு களத்தரிசிப்புகள் இடம்பெற்றன.

முதல் நாள் நுணாவில் கிழக்குப் பிரிவிலும், இரண்டாம் நாள் நகரசபை எல்லைக்குட்பட்ட அரச, தனியார் பாடசாலைகளிலும், மூன்றாம் நாள் நகரசபை எல்லைக்குட்பட்ட அரச, தனியார் அலுவலகங்களிலும் தரிசிப்புகள் இடம்பெற்றன. களப்பரிசோதனைகளில் நகரசபை, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், தென்மராட்சிப் பிரதேச செயலகம், சாவகச்சேரிப் பொலிஸார் ஆகியோர் ஈடுபட்டனர். (எ-41-9)



## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இந்தியர் கைது

கொழும்பு, ஜன.13

நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 2 ஆயிரத்து 400 சிகரெட்டுகளுடன் இந்தியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். விமானநிலைய பொலிஸ் அதிகாரிகள் குழுவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று அதிகாலை சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஏ-இ)

## தென்மராட்சியில் சிக்கன்குனியா!

சாவகச்சேரி, ஜன.13

தென்மராட்சிப் பிரதேசத்தில் சிக்கன்குனியாக் காய்ச்சல் வேகமாகப் பரவுவதால் பொதுமக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

காய்ச்சல் 3 நாள்களுக்கு மேலாகக் காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனையில் சிகிச்சைபெற்று குருதிப்பரிசோதனை மேற்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளனர்.

(எ-41-9)

## சுற்றிவளைப்புகளில் 956 பேர் கைது

கொழும்பு, ஜன.13

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடம் இருந்து போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

486 கிராம் ஹெரோய்ன், 544 கிராம் ஐஸ், 10 கிலோ 83 கிராம் கஞ்சா, 15 ஆயிரத்து 511 கஞ்சா செடிகள், 2 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 224 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 1178 போதைமாத்திரைகள், 139 கிராம் 70 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 183 கிராம் மாவா போதைப் பொருள் என்பன கைப்பற்றப் பட்டுள்ளன.

போதைப்பொருள்களுடன் தொடர்புடைய 956 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்ட 14 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 963 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 6 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## தங்கத்தின் விலை அதிகரிப்பு

தங்கத்தின் விலை நேற்று 3 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது என்று இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. ஒரு பவுண் 24 கரட் தங்கம் 3 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவாகவும், ஒரு பவுண் 22 கரட் தங்கம் 3 இலட்சத்து 37 ஆயிரத்து 600 ரூபாவாகவும் நேற்று விற்பனையானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)




## விடும் வட்டியும் –2

மரத்தை தறிக்கமுதல் அதில இருக்கிற கொப்புகளைத்தான் வெட்டுவினம். அப்பதான் நினைச்ச மாதிரி மரத்தை ஈஸியா வெட்டி விழுத்தமுடியும். அப்பிடித்தான் வீட்டுக்கட்சியை விட்டு வாத்தியாரை நிப்பாட்ட முதல் அவருக்குப் பக்கபலமா இருக்கிறவையைத் தங்கட பக்கம் இழுக்கிற வேலையில சட்டாம்பியர் குரூப் இறங்கி வேலை செய்யத் தொடங்கியிருக் குது. அதுக்கும் மசியா தவையை ஏதும் பிழை யளைக் கண்டுபிடிச்சு, அவைக்கு எதிரா ஒழுக்காற்று விசாரணை செய்யப்போறம் எண்டு கடிதம் அனுப்பி, வெருட்டி, அவையின்ர வாயளுக்குப் பூட்டுப்போடவும் வெளிக்கிட்டிருக்கினம். இப்பிடி வாத்தியாரின்ர கன்னைக்கு மட்டும் எதிராக் கம்பு சுத்தினால், தங்கட திட்டம் வெட்டைக்கு வந்து சனம் எதிர்ப்புக் காட்டும் எண்ட பயத்தில, தங்கட பக்கத்தில நிண்ட சில ரையும் பலி குடுக்கத் தொடங்கிட்டினமாம்.

அதில ஒரு பலியாடுதான், கரைதுறைப்பற்று சபையின்ர முன்னாள் தலைவர். அவர் சட்டாம்பியாரின்ர கடும் விசுவாசியளில ஒராள். ஆனால் குடியும் கும்மாளமும் எண்டு ஊருக்க நல்லபேரில்லை. அதால அவரைத் தவிசாளராப் போடவேண்டாமெண்டு மற்ற மெம்பர்மாரெல்லாம் காலில விழாக்குறையாக் கெஞ்சினவை. ஆனால் சட்டாம்பியாரைப் பற்றித்தான் எல்லாருக்கும் தெரியுமே. தான் பிடிச்சமெம்பருக்கு மூண்டு கால் எண்டு விடாப்பிடியா நிண்டு தவிசாளராக்கினவர். ஆனால் பிறகு அவர் குடிச்சுப்போட்டு றோட்டில கிடக்கிற படங்கள் வெளியாலவர, தவிசாளர் பதவியால அவரே நிப்பாட்டினவர். அந்தக் கோபத்தில முன்னாள் தவிசாளர் திசைகாட்டிப் பக்கமாச் சாய்ஞ்சு, அவைக்கு சப்போர்ட்டா வாக்களிச்சு பட்ஜெட்டை வெல்லப்பண்ணிப் போட்டார். அந்தக் கோபத்தில அவரைக் கட்சியை விட்டே சட்டாம்பியார் நிப்பாட்டினவர். இப்பிடித் தனக்குச் சப்போர்ட்டான ஆளையே கட்சியை விட்டு நிப்பாட்டுற அளவுக்கு கடும் நீதிமான் எண்டு காட்டினால், பிறகு வாத்தியாரை நிப்பாட்டினாலும் சனம் பேசாமல் இருக்கும் எண்டு நினைக்கினம் போல.

மற்றப்பக்கத்தால, வாத்தியாரின்ர விசுவாசியா இருந்த வட்டிக்காரரையும் இப்பிடித்தான் கட்சியை விட்டு நிப்பாட்டிப் போட்டு, இப்ப வாத்தியாருக்கு எதிரா சில வேலையள் செய்தால் திரும்ப கட்சியில சேர்த்து, மாகாணசபையிலையும் எலக்சன் கேக்க விடலாம் எண்டு ஆசை காட்டி இருக்கினம். அதை நம்பி வட்டிக்காரர் இப்ப வாத்தியாருக்கு எதிரா பேட்டியள் குடுக்க வெளிக்கிட்டிருக்கிறார். 'சுயேச்சைக்குழுவில நானா எலக்சன் கேக்கேலை, வாத்தியார் சொல்லித்தான் அப்பிடி கட்சிக்கு எதிரா சுயேச்சைக்குழுவில இறங்கினனான்' எண்டு சொன்னதோட நிக்காமல், அதை எழுத்திலையும் சட்டாம்பியாருக்கு அனுப்பி இருக்கிறாராம். உண்மையில அப்பிடித்தான் நடந்ததெண்டால், அதை முதலே கட்சிக்கு சொல்லியிருக்கோணும். அதை விட்டிட்டு வாத்தியரோட கொழுவிக்கொண்டு வந்திட்டு, 'அவர் சொல்லித்தான் செய்தன்' எண்டது அலாப்பல் கதைதானே. இப்ப கட்சிக்கு எதிரா சுயேச்சைக்குழுவை இறக்கினவர் எண்டு அடுத்த மத்தியக்குழுக் கூட்டத்தில பிரச்சினையை எழுப்பி, விசாரணை நடத்திற மாதிரி நடத்தி வாத்தியாரை கட்சியை விட்டு நிப்பாட்ட எல்லா ஏற்பாடும் ரெடியாம். இது வாத்தியார் தரப்புக்கும் தெரியுமாம். அப்ப வீடு இன்னும் சின்னாபின்னா மாகிறது உறுதியாயிட்டு கண்டியளோ.

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளை தெற்கில் உள்ளக வீதிகள் சேதம்



## சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜன.13**

**வற்றாப்பளை தெற்குக் கிராம அலுவலர் பிரிவில் பள்ளவெளி முதலாம் குறுக்கு வீதி, நான்காம் குறுக்கு வீதி, ஐந்தாம் குறுக்கு வீதி (சுரேந்திரன் கடைவீதி) என்பன மிக மோசமாகச் சேதமடைந்துள்ள நிலையில், அவற்றைச் சீரமைத்துத் தரவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

வற்றாப்பளை தெற்குக் கிராம அலுவலர் பிரிவிலுள்ள உள்ளக வீதிகளின் நிலைவரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். சேதமடைந்துள்ள வீதிகளைச் சீரமைத்துத்தரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

வீதிகளின் நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், கோரிக்கைகளை எழுத்துமூலமாக கையளிக்குமாறும், வீதிகளின் சீரமைப்புத் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் மக்களிடம் தெரிவித்தார். (க-246)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25 . 07 . 1935

மறைவு
13 . 01 . 2023

**பர்னானந்து ஜோசெப் அன்ரனி (அன்ரனி மாஸ்ரர்)**

(ஓய்வுபெற்ற அதிபர், சட்டத்தரணி, பதில் நீதவான் பிரசித்த நொத்தாரிசு - JPum)

பண்பாலே உயர்ந்தவரே
பாசத்தினால் கட்டுண்டவரே
பிள்ளைகள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள் என
மறந்து தந்தை தாயுடன்
சேர்ந்துள்ளீர்களோ!
உங்களை மட்டும் எத்தனை
ஆண்டுகள் சென்றாலும்
மறக்க முடியவில்லையே!
அப்பா அப்பா அப்பா
நெஞ்சம் சிதறுகிறது
எம் அருகிலில்லையென !!
ஆண்டுகள் மூன்றாயின
உங்கள் முகம் கண்டு

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(CS/60427) J-1




# தைப்பொங்கல் சிவகுரு சங்கமம்

யாழ்ப்பாணம், ஜன.13

தைப்பொங்கல் சிவகுரு சங்கமம் நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் தைப்பொங்கல் திருநாளான நாளைமறுதினம் வியாழக்கிழமை மாலை 3 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது. (எ-41-66)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச அல்லிப்பளை கிராம அலுவலர் பிரிவில் முதியோர் சங்க மீள் உருவாக்கலும் 'தற்போதைய சூழலும் பாதுகாப்பும்' என்ற தொனிப்பொருளின்கீழ் வாழ்வை மேம்படுத்தும் நோக்குடனானவிழிப்புணர்வு நிகழ்வும் அண்மையில் அல்லிப்பளை கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்றன. நிகழ்வில் சமூகசேவை உத்தியோகத்தர், உளவளத் துணை உத்தியோகத்தர், சமூக சேவைப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமமட்ட உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-41-9)


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**மலர்வு**
09.05.1955

**உதிர்வு**
13.01.2025

**13.01.2025 திங்கட்கிழமை
இறைபதமடைந்த**

**அமரர் கில்டா ஜெனற் தோமாஸ்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுத் திருப்பலி 14.01.2026 புதன்கிழமை காலை 5.45 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.


அன்னாரின் நினைவுத் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
பாஷையூர் குடும்பத்தினர்

(CS 60436) E



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
13 . 11 . 1938

மறைவு
16 . 12 . 2025

**கடந்த 16.12.2025 செவ்வாய்க்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்**

**சிதம்பரப்பிள்ளை பரமானந்தன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (13.01.2026) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (15.01.2026) வியாழக்கிழமை முற்கல் 11.30 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற்று மதியபோசன நிகழ்வு மதியம் 01.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி (நாவலடி)
மயிலிட்டி

குடும்பத்தினர்
(வனஜா)

(CS 60293) E


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# இந்தியா, ஈழத்தமிழர்களுக்கு என்னசெய்யப்போகின்றது?

இலங்கையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ள சூழலில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதம், ஈழத் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் குறித்த மிக முக்கியமான நகர்வாகப் பார்க்கப்படுகிறது. இலங்கையின் புதிய அரசியலமைப்பில் முன்மொழியப்பட்டுள்ள 'ஏக்கிய ராஜ்ஜிய' (ஒற்றையாட்சி) மாதிரியானது தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பறித்து, அவர்களை மீண்டும் அடிமைப்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளதாக முதலமைச்சர் ஸ்டாலின் சுட்டிக்காட்டியிருப்பதுடன், இலங்கையில் ஒரு கூட்டாட்சி முறையை (Federal System) உருவாக்க இந்தியா தூதரக ரீதியான அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். கடந்த 16 ஆண்டுகால ஒற்றையாட்சிக் கட்டமைப்பின்கீழ் நிகழ்ந்த திட்டமிட்ட நில அபகரிப்புகள் மற்றும் தமிழ் அடையாளச் சிதைவுகளைத் தடுத்து நிறுத்த அதிகாரப்பரவலாக்கம் மட்டுமே தீர்வாக அமையும் என்ற தமிழகத்தின் ஒருமித்த குரலாக இந்தக் கடிதம் வெளிப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழகத்தின் இந்த உணர்வுபூர்வமான கோரிக்கைக்கு டெல்லி எந்தளவுக்குச் செவிசாய்க்கும் என்பதுதான் தற்போதுள்ள பிரதான கேள்வியாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, அதன் புவிசார் அரசியலும் சீனாவுடனான போட்டிநிலையும் இலங்கையுடனான உறவைத் தீர்மானிப்பதில் பெரும் பங்குவகிக்கின்றன. தமிழக முதலமைச்சரின் அழுத்தம் டெல்லியின் கவனத்தை ஈர்த்தாலும், இந்திய மத்திய அரசு தனது வெளியுறவுக் கொள்கையைத் தமிழகத்தின் விருப்பங்களுக்கு மட்டும் உட்பட்டு அமைத்துக் கொள்ளுமா என்பது சந்தேகமே. ஏற்கனவே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் இந்தியா விடுத்த பகிரங்கக் கோரிக்கைகளை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதுவரை பெரியளவில் கண்டுகொள்ளவில்லை. 'மக்களின் ஆணை' என்ற பெயரில் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதுகாப்போம் என்று உறுதியளித்துள்ள தற்போதைய இலங்கை அரசாங்கம், இந்தியாவின் மென்மையான கோரிக்கைகளைக்கூட உள்நாட்டு இறையாண்மையில் தலையிடுவதாகக் கருதி, புறக்கணித்து வருகின்றது.

இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊழல் ஒழிப்பு மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றின் மூலம் சிங்களத் தேசத்தின் மத்தியில் பெரும் செல்வாக்கை ஈட்டியுள்ள நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வில் விட்டுக்கொடுப்புகளைச் செய்வது அவர்களின் வாக்குவங்கியைப் பாதிக்கும் என்று அஞ்சக்கூடும். ஒருவேளை இந்தியப் பிரதமர் மோடி, தமிழக முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று இலங்கையின் புதிய அரசமைப்பில் கூட்டாட்சிக் கொள்கையைச் சேர்க்குமாறு கடும் அழுத்தம் கொடுத்தால் கூட, அதனை அநுர அரசாங்கம் சவாலாகவே எதிர்கொள்ள வாய்ப்புள்ளது. ஏனெனில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டியைச் சாதகமாகப் பயன்படுத்தி, இந்தியாவின் அழுத்தங்களிலிருந்து தப்பிக்கும் தந்திரோபாயத்தை இலங்கை அரசாங்கம் கையாண்டு வருகின்றது. எனவே, வெறும் கடிதப் பரிமாற்றங்களுடன் நின்றுவிடாமல், ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை உறுதிப்படுத்த இந்தியா காத்திரமான மற்றும் உறுதியான தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியது வரலாற்றுத் தேவையாகும்.



## பொய்யாமொழி

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
**உள்நின் றுடற்றும் பசி**

**பொருள்:** கடல்நீர் சூழ்ந்த உலகமாயினும், மழைநீர் பொய்த்து விட்டால் பசியின் கொடுமை வாட்டி வதைக்கும்.




# ஈ.பி.எவ். நிதியத்தில் ஓய்வூதியத் திட்டம்!




*பரிசீலிக்கின்றது அரசாங்கம்*

**கொழும்பு, ஜன.13**
**ஊழியர் சேமலாப நிதியத்தின்கீழ், ஓய்வூதியத் திட்டத்தினூடாக சலுகைகளை வழங்குவதற்கான திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.**

இந்தத் திட்டமானது தன்னார்வ விருப்பமாக இருக்கும் என்று தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.
இந்தத் திட்டத்தினூடாக ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு பல்வேறு தெரிவுகள் வழங்கப்படவுள்ளன. ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவையிலுள்ள தொகையை முழுமையாகப் பெற்றுக்கொள்ளல், ஓய்வூதிய அடிப்படையில் நிதியைப் பெறுதல் உள்ளிட்ட விடயங்கள் இந்தத் திட்டத்தில் அடங்குகின்றன. இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள தேசிய தொழிலாளர் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் இந்த விட யங்கள் தொடர்பாக விவாதிக்கப்படும் என்று தொழில் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## வழமைக்குத் திரும்பியது மின்பிறப்பாக்கி

கொழும்பு, ஜன.13
பராமரிப்புப் பணிகள் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின்பிறப்பாக்கி ஒன்று மீண்டும் வழமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த மின் பிறப்பாக்கி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இதுவரையில் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படவில்லை என்றும், எதிர்வரும் சில தினங்களுக்குள் அதைத் தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## தனியார் துறைக்கான கடன்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.13
வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்தொகை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 262 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் தனியார் கடன் வழங்கல் 26 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது என்றும், மொத்தத் தனியார் கடன் வழங்கல் முதன்முறையாக 10 ஆயிரத்து 29 பில்லியன் ரூபாவைக் கடந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## திலினிக்கு பிடியாணை

தொழிலதிபர் திலினி பிரியமாலிக்கு எதிராக ஹோமாகம நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று அவருக்கெதிரான வழக்கில் முன்னிலையாகத் தவறியதையடுத்தே ஹோமாகம நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார். (எ-இ)

# விதை நெல் உற்பத்திக்கு விசேட காப்புறுதித்திட்டம்

கொழும்பு, ஜன.13
விதைநெல் உற்பத்திப் பண்ணைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் விசேட காப்புறுதித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பேரிடர் நிலைமைகளை முகாமைத்துவம் செய்யும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று விவசாய மற்றும் கமநல காப்புறுதிச்சபை தெரிவித்துள்ளது. ஒரு ஏக்கர் விதை நெல் செய்கைக்காக 13 ஆயிரத்து 600 ரூபா காப்புறுதி செலுத்தவேண்டும் என்றும், பயிர்ச்சேதம் ஏற்படும் போது ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நட்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## கும்பம்

**மனதில் பட்டதை மறைக்காமல் அப்படியே பேசும் நீங்கள், பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தில் பங்கெடுத்துக்கொள்வீர்கள்.**

உங்கள் ராசிக்கு 4இல் சந்திரன் நிற்கும் போது இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறந்ததால் பொருளாதாரம் உயரும். செல்வாக்குக் கூடும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். பழைய கடனைத் தீர்க்கும் அளவுக்கு வருமானம் உயரும். சிலர் சொந்த வீடு வாங்குவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். தள்ளிப்போய்க் கொண்டிருந்த மகளின் திருமணத்தை ஊரே மெச்சும்படி வெகு விமரிசையாக நடத்திக் காட்டுவீர்கள்.

மகனுக்கு வெளிநாட்டில் நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். சிலருக்கு வெளிமாநிலங்களில் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பு அமையும். வெகுநாள்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த வழக்கில் நல்ல தீர்ப்புக் கிட்டும். பங்காளிப் பிரச்சினை முடிவுக்கு வரும். அடிக்கடி தொல்லை கொடுத்துவந்த வண்டியை மாற்றிவிட்டு புதிய வாகனத்தில் பயணிப்பீர்கள். இனி ஓரளவு வசதியான வீட்டுக்கு மாறுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். நீண்ட நாள்களாக போக நினைத்தும் போகமுடியாமல் போன புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 5ஆம் வீட்டில் நிற்பதால் புதுச் சொத்து வாங்குவீர்கள். உடல் நலம் சீராகும். வாகனத்தை மாற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு உயரும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 6ஆம் வீட்டுக்கு வருவதால் தந்தையாருக்கு உடல்நலம் பாதிக்கும். அரசுக் காரியங்கள் தடைபடும். 14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 7ஆம் வீட்டுக்குச் செல்வதால் வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். வருடம் முழுவதும் சனி பகவான் ராசிக்கு 2ஆம் வீட்டில் நிற்பதால் எதிர்பாராத பணவரவு உண்டு. சாதுர்யமாகப் பேசி சில வேலைகளை முடிக்கப் பாருங்கள். யாரைப் பற்றியும் குறை கூறவேண்டாம். டிசெ.4ஆம் திகதி வரை ஜென்ம ராகுவாக இருப்பதால் மனப்போராட்டங்கள் அதிகரிக்கும். சில சமயங்களில் எதிர்காலத்தைப் பற்றிய பயம் வரும். கேது ராசிக்கு 7ஆம் வீட்டில் நிற்பதால் குடும்பத்தில் விட்டுக்கொடுத்து போகவும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். டிசெ. 5ஆம் திகதி முதல் ராகு 12ஆம் வீட்டுக்குச் செல்வதால் விரயச் செலவுகள் அதிகரிக்கும். கழுத்துவலி, முதுகுவலியால் அவதிப்படுவீர்கள்.

கண்ணைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். கேது 6ஆம் வீட்டுக்கு வருவதால் குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். இரண்டு தலைமுறைகளாகச் சந்திக்காத உறவினர்களைச் சந்திப்பீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள்.

இல்லத்தரசிகளுக்கு ஆடை, ஆபரணங்கள் சேரும். கணவரின் அன்பு அதிகரிக்கும். சிலர் பழைய தங்கத்தைக் கொடுத்துவிட்டு புதுடிசைனில் நகைகள் வாங்குவீர்கள். புகுந்த வீட்டில், பிறந்த வீட்டின் பெருமையைப் பேசிக்கொண்டிருக்காதீர்கள். கன்னிப் பெண்களுக்குத் தடைப்பட்ட கல்யாணம் கைகூடி வரும். கனவுத் தொல்லை, தூக்கமின்மையால் அவதிப்படுவீர்கள். மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வியில் வெற்றியுண்டு. ஆசிரியரின் அன்பைப் பெறுவீர்கள். சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளவும்.

வியாபாரத்தில் சந்தை நிலைவரத்தை அறிந்து புதுச் சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். சிலர் புதிய கிளைகள் தொடங்க வாய்ப்பு உண்டு. வேலையாட்களின் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். இரும்பு, உணவு வகைகள், எண்ணெய் வகைகளால் இலாபமீட்டுவீர்கள். கூட்டுத்தொழிலில் அவ்வப்போது போட்டிகள் இருந்தாலும் அதையெல்லாம் நினைத்துக் கவலைப்படாமல் இலாபத்தை ஈட்டுவீர்கள்.

உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொந்தரவு தந்த அதிகாரி வேறிடத்துக்கு மாற்றப்படுவார். எதிர்பார்த்த சம்பள உயர்வு, சலுகைகள் கிடைக்கும். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். கணினித் துறையினருக்கு வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து புதிய வேலைகளும் தேடிவரும். கலைத் துறையினருக்கு பழைய நிறுவனத்தி லிருந்து வாய்ப்புகள் வரக்கூடும். எதையும் தட்டிக் கழிக்கவேண்டாம். உங்களின் படைப்புகள் வெளிப்படும். எழுத்து, நடிப்பு ஆகிய துறைகளில் வெற்றி கிட்டும். மொத்தத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு, சவால்களை சாமர்த்தியமாக கையாண்டு, சாதிக்க வைப்பதாக அமையும்.

**பரிகாரம்: மாரியம்மன் கோயிலில் வெள்ளிக்கிழமையில் நெய் தீபம் ஏற்றி, தானியங்களைக் காணிக்கையாகக் கொடுத்து வணங்குங்கள். எதிலும் வெற்றி கிட்டும்.**

# சிறுப்பிட்டியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜன.13

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க.கயிலைவாசனின் 'சுந்தரப்பேரம் செய்த படலம்' எனும் தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# நகுலேஸ்வரத்தில் பொங்கல் வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.13

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் தைப்பொங்கல் சிறப்பு வழிபாடு நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணியளவில் சிறப்பு அபிஷேகம் இடம்பெற்று பொங்கல் வழிபாடுகளுடன் பூஜையும் நடைபெறுமென ஆலய ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமான சிவஸ்ரீ. ந.ரங்கநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார். (எ-41-66)

# இலங்கைச் சுங்கத் திணைக்களத்துக்கு உயர் தொழில்நுட்ப ஸ்கானர்கள்



யாழ்ப்பாணம், ஜன.13

அவுஸ்திரேலிய எல்லைப் படையினரால் இலங்கைச் சுங்கத் திணைக்களத்துக்கு இரு உயர் தொழில்நுட்ப ஸ்கானர்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் பயன்படுத்துவதற்காக இவை வழங்கப்பட்டுள்ளன.

ஸ்கானர்களை வழங்கும் நிகழ்வு காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. அவுஸ்ரேலியத் தூதுவர் மேத்யூ டக்வொர்த், இலங்கைச் சுங்க இயக்குநர் ஜெனரல் சீவலி அருகோடவிடம் ஸ்கானர்களை அதிகாரபூர்வமாக ஒப்படைத்தார். நிகழ்வில் சுங்க இயக்குநர் ஜெனரல் பால் எட்வர்ட்ஸ், ஆஸ்திரேலியத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். குடும்பப் பெரியவர்களுடன் கலந்துபேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**இடபம்:** கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுக்க முயற்சி செய்யவும்.

**துலாம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் போது பொறுமை அவசியம்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் அவசியத்தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்கு டென்மார்க் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

**கொழும்பு, ஜன.13**

**தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான சர்வதேச விசாரணைக்கு டென்மார்க் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.**



டென்மார்க் தமிழ் அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் இணைந்து டென்மார்க் வெளிநாட்டமைச்சின் ஆசிய பசுபிக் பிராந்திய அதிகாரிகளைச் சந்தித்த போது, இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

தமிழர் தாயகத்தில் விரைவாகத் திட்டமிட்ட முறையில் தொடரும் பௌத்தமயமாக்கல், திட்டமிட்ட கலாசாரச் சீர்கேடுகள் உள்ளிட்ட கட்டமைப்புசார் இன அழிப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்னும் பெயரில் சிங்கள அரசு முன்னெடுத்துவரும் ஏக்கிய இராஜ்ஜிய அரசியலமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தினர். "இலங்கையிலுள்ள ஒற்றையாட்சி முறைமையே தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு முக்கியமான காரணியாகவுள்ளது. இதனை எமது மக்கள் 76 வருடங்களாக அங்கீகரிக்கவில்லை. எனினும் ஒற்றையாட்சியைத் திணிப்பதற்கு தற்போதைய அரசாங்கமும் தீவிரமாகச் செயற்பட்டுவருகின்றது. தமிழ் மக்கள் ஒவ்வொரு தேர்தல்களிலும் வழங்கிவரும் சமஷ்டித் தீர்வு எனும் ஆணைக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த முயற்சியைத் தடுத்துநிறுத்த அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். மாறாக தமிழர்தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த சமஷ்டி முறையிலான அரசியல் வரைவை உருவாக்க அழுத்தம் கொடுக்கவேண்டும்" என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (க)



வேலணைப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிச் சென்ற வருடம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு பிரதேச செயலாளர் த. அகிலன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (எ-41-9)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த 108 நலிவுற்ற குடும்பங்களுக்கு தைப்பொங்கலுக்குரிய பானை உள்ளிட்ட பொருள்கள் இரட்டைக்கேணி அம்மன் ஆலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.
புலம்பெயர் நாட்டில் வதியும் பளையைச் சேர்ந்த பொ. சுப்பிரமணியத்தின் நிதியனுசரணையில் இவை வழங்கப்பட்டன. (எ-41-9)



அரியாலை சுதேசிய 107 ஆவது திருநாள் கொண்டாட்ட விழாவுக்கான புதிய நிர்வாக சபை அண்மையில் தெரிவுசெய்யப்பட்டது. (கு-17)



# மீன்களின் விலை உச்சம்

யாழ்ப்பாணம், ஜன.13
யாழ். மாவட்டத்தில் மீன்களின் விலை அதிகரித்துள்ளது.
சீரற்ற காலநிலையால் மீனவர்கள் கடலுக்கு அதிகம் செல்லவில்லை.
இதனால் சந்தைகளுக்கு மீன்களின் வருகை மிகக்குறைவாக உள்ளது. தீவுப் பகுதி மற்றும் வடமராட்சிப் பிரதேசங்களில் இருந்து யாழ். நகருக்கு கடலுணவுகளின் வருகை குறைந்துள்ளது.
இதனால் சந்தைகளுக்குக் கிடைக்கும் மீன்கள் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. (கு-17)



வரணி வங்கி வலயத்துக்குட்பட்ட ஒரு பயனாளிக்கு சமையல் உபகரணங்கள், துவிச்சக்கரவண்டி ஆகியன அண்மையில் வழங்கப்பட்டன. தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் அவற்றைக் கையளித்தார். (எ-41-9)



# வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம். ஜன.13
யாழ். மாவட்டத்தில் வாழைப் பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.
ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 120 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இதரை வாழைப்பழம் ஒரு கிலோ 60 ரூபா முதல் 70 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.
டித்வா புயலின் பின்னர் யாழ்ப்பாணத்தில் வாழைச்செய்கை அழிவடைந்திருந்ததுடன், பழத்தின் விலையும் குறைவடைந்திருந்தது. இந்த நிலையில் மீண்டும் விலை அதிகரித்துள்ளது. (கு-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் குழப்ப நிலையால் 500 பேர்வரை உயிரிழப்பு!

**தெஹ்ரான், ஜன.13**

**ஈரானில் ஏற்பட்டுள்ள போராட்டம் உக்கிரமடைந்துள்ளநிலையில், மோதல்கள் காரணமாக சுமார் 500 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த மாதம் 28ஆம் திகதி தொடங்கிய அரச எதிர்ப்புப்போராட்டம் ஈரானின் 31மாகாணங்களில் 100 நகரங்களில் கடந்த 15 நாள்களாக நீடித்து வருகின்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வன்முறைகளில் இறங்கியுள்ளநிலையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களை அடக்குவதற்கு அரசாங்கமும் பாதுகாப்புப் படைகளைக் களமிறக்கியுள்ளது. வன்முறைளைத் தடுக்கும் நோக்கில் அங்கு இணையசேவைகள் முடக்கப்பட்டுள்ளதுடன், சில அரச ஊடகங்கள் மட்டுமே செயற்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அங்கு நடைபெறும் மோதல்களால் சுமார் 500 பேர்வரை உயிரிழந்திருக்கலாம் என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. அதேவேளை போராட்டத்தில் ஈடுபட்ட 2 ஆயிரத்து 600 பேர் வரையில் அரசாங்கத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள், கலகக்காரர்களுக்கு உதவுபவர் கள் அல்லது வன்முறையில் பொருள்களைச் சூறையாடுபவர்கள் மற்றும் பாதுகாப்பின்மையை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகக் கடுமையான, விரைவான, சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது.

(ஏ-இ)

# வெனிசுலாவிலிருந்து வெளியேறும் அமெரிக்கர்கள்

வெனிசுலாவிலிருந்து அமெரிக்கக் குடிமக்கள் அனைவரும் அந்த நாட்டை விட்டு 'உடனடியாக' வெளியேறவேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த நாட்டில் ஆயுதமேந்திய குழுக்கள் பல இடங்களில் வீதித் தடைகளை ஏற்படுத்தியுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வீதிகளில் செல்லும் வாகனங்களை வழிமறித்துச் சோதனையிடும் இந்தக் குழுக்கள், வாகனத்தில் இருப்பவர்கள் அமெரிக்கக் குடிமக்களா அல்லது அமெரிக்காவுக்கு ஆதரவானவர்களா என்பதற்கான சான்றுகளைத் தேடுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஏ-இ)

ஓம் விராட் விஸ்வ பிரமனே நம

## மரண அறிவித்தல்



மலர்வு 23 . 03 . 1945 — உதிர்வு 12 . 01 . 2026

### குட்டிப்பிள்ளை இராஜகோபால்

**(லங்கா சீமென்ற் லிமிட்டட் காங்கேசன்துறை ஊழியர்)**

யாழ்ப்பாணம் வண்ணை நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் சங்கானை நாகலிங்க சுவாமிகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டிப்பிள்ளை இராஜகோபால் அவர்கள் 12.01.2026 திங்கட்கிழமை அன்று காமாட்சிபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை கமலாதேவியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்லம்மா தம்பதிகளின் மரு மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தவமணிதேவி (பொன்னார்), அசோகராஜா அவர்களின் சகோதரரும், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் ரஞ்சினி, காலஞ்சென்றவர்களான தர்மராஜா, மகாதேவன், தங்கரத்தினம், பரமேஸ்வரி மற்றும் செங்கமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2026) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**நாகலிங்க சுவாமி வீதி,**
**சங்கானை.**
**077 716 6492, 071 861 9215**

(CS 31250) ER

## மரண அறிவித்தல்



மண்ணில் 13 . 01 . 1943 — விண்ணில் 12 . 01 . 2026

### கந்தையா நடராசா

(அச்சுவேலி கூட்டுறவுச் சங்க முன்னாள் முகாமையாளர்)


ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை' வசிப்பிடமாகவும் அச்சுவேலி கூட்டுறவுச் சங்க முன்னாள் முகாமையாளருமான கந்தையா நடராசா அவர்கள் நேற்று (12.01.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், நடராசா இராசராணியின் அன்புக் கணவரும், மகாலிங்கம் (ஜேர்மனி), கோபாலகிருஷ்ணன் (டென்மார்க்), காலஞ்சென்றவர்களான கமலாதேவி, பரிமளாதேவி, வகிந்தநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராமசாமி, சரஸ்வதி, நவரத்தினம், சந்திரதேவன் மற்றும் தருமதுரை, சரோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும், சிறீகரன் (பிரான்ஸ்), சிறீதரன் (பின்லாந்), சிறீரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லாவண்யா, வனிதா, நவேந்திரலிங்கம் ஆகியோரின் மாமனாரும், அஸ்வின், ஆதர்ஷா, ஜெய்ஷா, மாதுஜா, ஆருஷன், அபிஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.01.2025) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டு கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 40 23 386**

## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 08 . 1947 — இறப்பு 04 . 01 . 2026

### நல்லையா தங்கராசா

யாழ். சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், புகுந்த இடம் முருகன் வீதி, பிரான்பற்றும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தங்கராசா இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொன்னுத்துரை - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன், தங்கேஸ்வரன், ஜெயந்தி, சாந்தி, ஜெகதீஸ்வரன், தயாபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சிகா, கோகிலா, விஜிதரன், அறிவழகன், தாரணி, துளசி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தவம், வல்லிபவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேலும்மயிலும் செல்லக்கிளி, தேவா, பவதாரணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், விநாயகமூர்த்தி, கோமதி, வதனி, சிவகுமார், செல்வகுமார், சுதா, சுரேஷ்குமார், ரூபன், நித்தியா, ரஜி, தர்ஷிகா, சிந்து, அஜெந்த், சுஜி, சரண்யா, விஜிதரன், கவிதரன், திவ்ஜா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், இஷாலினி, சிந்துஷன், லக்ஷனா, கபிலன், நவிந்தன், அபிலாஷ், கனுஜன், சுருதி, பிரவீன், அனிஸ், அஷ்வின், நிவிதா, அஜெய், தினேஷ், தர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2025) செவ்வாய்க்கிழமை Dillenburg Germany ஜேர்மனி நேரப்படி 11.00 A.M to 2.00 P.M வரை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**வேலும்மயிலும் குடும்பத்தினர்.**

(CR 31246) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை துறைமுகப்பகுதி மின்கம்பம் சரியும் அபாயத்தில்

வடமராட்சி, ஜன.13

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் உள்ள மின்கம்பம் கடுமையாகச் சிதைவடைந் துள்ளதால், அது எந்த நேரமும் முறிந்து விழும் அபாயத்தில் உள்ளது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ள னர். மின்கம்பத்தின் அடியில் இருந்து மேல் நோக்கியதாக அரைவாசிப் பகுதி சிதைவடைந்துள்ளது. கடற்கரைப் பக்கமாக வேகமாகக் காற்று வீசும் சந்தர்ப்பத்தில் கம்பம் முறிந்து விழும் அபாயத்தில் உள்ளது. இந்தத் துறைமுகப் பகுதிக்கு அதிகளவானோர் தினமும் மாலை வேளையில் வந்து செல்லும் நிலையில், மின்கம்பத்தை மாற்றியமைக்க சம்பந்தப் பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

(க-100)





கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் 11 மாணவர்களுக்கான உயர்தர பாடத்தெரிவு மற்றும் தரம் 9 மாணவர்களுக்கான தொகுதிப் பாடத்தெரிவு சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. தென்மராட்சிப் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் வித்தியாலய அதிபர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (எ-4-19)


## தவறவிடப்பட்டுள்ளது

கடந்த 06.01.2026 செவ்வாய்க் கிழமையிலிருந்து கார்த் திறப்பு (Car Key) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உதயன் பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(CS/60443) E

## வீட்டுக்கு சைவசமயத்தில் குடும்பம் தேவை

யாழ்ப்பாணம், சுன்னாகம் கிழக்கு
ஓய்வுபெற்ற ஆசிரியர்களின்
வீட்டுக்கு நிரந்தரமாக
சைவசமயகுடும்பம் ஒன்று தேவை.
இடம் - 54/4, சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
தொடர்புகளுக்கு:
077 197 5335, 077 540 4570, 074 197 5230

(CS/60442) J-1


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை

**வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அசைவற்ற ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு மக்களின் ஆட்சேபனை பெறும் பொருட்டு செய்யப்படும் அறிவித்தல்.**

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141 முதல் 146 வரையான பிரிவுகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் உப அலுவலகங்கள் ரீதியாக (சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை, அராலி) மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பட்டியல்களை அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள இடப்பரப்புக்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அந்தந்த உப அலுவலகங்களில் குறித்த ஆதனங்களின் சொந்தக்காரர்/ வாடகைக் குடியிருப்பாளர் பரிசோதிக்கலாம்.

மீள் மதிப்பீடு செய்யப்பட்ட இவ் அசைவற்ற ஆதனங்களின் சொந்தக்காரராயினும் சரி வாடகைக் குடியிருப்பாளராயினும் சரி குறித்த மதிப்பீடுகளுக்கு எதிரான எழுத்திலான ஆட்சேபனைகளை உரிய ஆவணங்களுடன் இந்த அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கலாம் என இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**சண்முகநாதன் ஜயந்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**13.01.2026**

(CS 46698) E


JCB

SENOK

JCB நிறுவனத்தின் முழு இயந்திர வரிசைக்குமான
இலங்கை மற்றும் மாலத்தீவு நாடுகளுக்கான உத்தியோகபூர்வ
முகவர் உரிமை மீண்டும் SENOK வசம்



பெக்கோ லோடர்கள், வீல் லோடர்கள், கம்பாக்டர்கள், அகழ்வாராய்ச்சி இயந்திரங்கள்,
ஸ்கிட் ஸ்டியர் ஏற்றிகள், டெலிஹேண்ட்லர்கள், எலக்ரிக் சிஸர் லிஃப்ட், ஜெனரேட்டர்கள்

JCB இயந்திரங்கள் மீண்டும் செநொக் குடும்பத்திற்கு திரும்பியது.

செநொக் டிரேட் கம்பைன் (Pvt) Ltd.
3 ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 05.
077 230 6039 / 077 492 2065 / 077 753 9010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 2024ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு மற்றும் கல்லூரிதின விழா கல்லூரிக் கலையரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.


கல்லூரி அதிபர் வி. உதயமோகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் திட்டமிடல் மருத்துவ அதிகாரி மருத்துவர் சோமசுந்தரம் நித்தியானந்தா கலந்துகொண்டார்.


நிகழ்வில் கல்வி, விளையாட்டு, இணைப்பாடவிதான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல துறைகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (க)



தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அலகால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பிரதேச செயலகம் முன்பாக உணவகம் ஒன்று கடந்த வாரம் திறக்கப்பட்டது. (எ-41-9)

இயக்கச்சி கிராம அலுவலர் பிரிவில் வாழும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய 50 குடும்பங்களுக்கு பளைப் பிரதேச செயலாளர் தலைமையில் நிவாரணப்பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (எ-41-9)





வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையின் சாரண மாணவர்களுக்கான 2026ஆம் ஆண்டுக்கான சாரணத் தொகை மதிப்பீட்டுச் சின்னம் அண்மையில் சூட்டப்பட்டது. (எ-41-9)



# யோகாசனப் பயிற்சி

பளை, ஜன.13

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சமூக மருத்துவ அலகினால் பளை நரசிம்ம வைரவர் அறநெறிப்பாடசாலையில் யோகாசனப் பயிற்சி வகுப்பு அண்மையில் நடத்தப்பட்டது.

பயிற்சிநெறியின் வளவாளராக பிரதேச செயலக சமூக மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவர் பா. திபேகா கலந்துகொண்டார்.

வகுப்பில் இந்து கலாசார உத்தியோகத்தர், சுதேச வைத்திய அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர், காணிக்கிளையின் அபிவிருத்தி உத்தியோகத்தர், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர் ஆகியோர் பங்கு பற்றினர். (எ-41-9)



# விழிப்புணர்வுப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜன.13

'பெண்களுக்கான தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களின் ஊடான தாங்குதிறன் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளிற்கமைய விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலா முற்ற மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. [illegible]ணிப்பின்கீழ் [illegible] குடிசார் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான மற்றும் பெண்கள், இளைஞர் தலைவர்கள், உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்களுக்கே இப்பயிற்சிநெறி இடம்பெற்றது.

இதில் சாதனப் பாதுகாப்பு, டிஜிற்றல் பாதுகாப்பு, இணைய அபாயங்கள், சமூக ஊடக நெறிமுறை, இணையப் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவுக் கருவிகளின் பயன்பாடு ஆகியன தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது. (41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் - பஸ்...

முரசுமோட்டை நான்காம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. விசுவமடுப் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த காரும், வவுனியாவில் இருந்து விசுவமடு நோக்கிப் பயணித்த பேருந்துமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளன. காரில் 5 பேர் பயணித்த நிலையில், அவர்களில் 4 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொன்னையா பூபாலன் (வயது-46), சந்திரகுமார் சவேந்திரன் (வயது-34), குணரத்தினம் குணதர்சன் (வயது-34), பிரசாத் (வயது-34) ஆகியோரே சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். உயிரிழந்த அனைவரும் விசுவமடுவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவருகின்றது.



பேருந்தின் சாரதியும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113-26)

## ஓரிரு...

உள்ளது - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது மழை கிடைத்து வருகின்றது. இந்த மழையுடனான காலநிலை எதிர்வரும் 15ஆம் திகதிவரை தொடர்வதற்குச் சாத்தியங்கள் உள்ளன. ஆதலால், விவசாயிகள் அதற்கேற்ற வகையில் தமது செயற்பாடுகளைத் திட்டமிடுவது அவசியம். இரவில் வெப்பநிலையில் ஏற்படும் வீழ்ச்சியும், ஈரப்பதன் மாற்றமும் குளிரான வானிலையை ஏற்படுத்துகின்றன. இந்த நிலைமையும் அடுத்த சில நாள்களுக்குத் தொடரும் - என்றுள்ளது. (அ-ம-66-26-20)

## 2,500 ஏக்கர்...

தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் காணி விடுவிப்புத் தொடர்பில் வாக்குறுதிகளை வழங்குகின்ற போதிலும், அந்த வாக்குறுதிகளுக்கு அமைய செயற்படுவதில்லை. குறிப்பாக வலிகாமம் வடக்கில் மட்டும் 2 ஆயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இவற்றில் பலாலி மேற்கு, பலாலி வடமேற்கு, மயிலிட்டித்துறை தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் முற்றாக விடுவிக்கப்பட வேண்டிய நிலைமையே உள்ளது. இந்தக் காணிகளில் பெரும் பகுதியை இராணுவத்தினரும் பயன்படுத்துவதில்லை. அவை பற்றைகள் மண்டிக் காணப்படுகின்றன. எனவே, அந்தக் காணிகளை விடுவிப்பதால் இராணுவத்துக்கு எந்தப் பாதகமும் ஏற்படப்போவதில்லை.

அதேபோன்று பலாலி கிழக்குப் பகுதியில் கிட்டத்தட்ட 600 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் தேவையற்ற வகையில் உயர்பாதுகாப்பு நிலங்களாக உள்ளன. அதே இடங்களில் வயாவிளான் சந்தியை அண்மித்த மானம்பிராய் ஆலயத்தோடு இணைந்த 3 ஆலயங்களுக்கு உரிய காணிகளை ஏற்கனவே விடுவிக்க சம்மதம் தெரிவிக்கப்பட்ட போதிலும், இன்னமும் விடுவிப்புச் சாத்தியமாகவில்லை.

அதேபோன்று குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளில், இராணுவத்தின் விவசாய நடவடிக்கைக்காக காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் காணிவிடுவிப்புக்காக மக்கள் காத்திருக்கிறார்கள். 1990 ஜூன் மாதம் இடம்பெயர்ந்து சென்ற அவர்களால், இன்றளவும் தமது நிலங்களுக்குத் திரும்பமுடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன், பலாலி வீதி இரவு 7 மணிவரையே அனுமதிக்கப்படுகின்றது. அதை 24 மணிநேரமும் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு விடுவிக்க வேண்டும். அதேபோன்று வயாவிளான் சந்தியிலிருந்து கட்டுவன் சந்தி வரையில் தெல்லிப்பழை மருத்துவமனைக்குச் செல்வதற்கான பாதை 35 ஆண்டுகளுக்கும் மேலாக விடுவிக்கப்படாமல் உள்ளது - என்றார். (அ-ம-26)

## வல்வெட்டித்...

பிற்பகல் ஒரு மணிமுதல் இந்த விழா இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## யாழில்...

சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொடவுக்கும், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே, யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி நடவடிக்கைகளை நேரடியாக முன்னெடுப்பதுக்குரிய ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு சுங்கத் திணைக்களம் தயாராகவுள்ளதாகச் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட உறுதியளித்துள்ளார்.

இதன்போது, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த விவசாய மற்றும் ஏனைய உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குத் தற்போதைய நிலையில் மூன்றாம் தரப்பினரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனால், உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான இலாபம் குறைவடைகின்றது என்ற விடயத்தை ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டினார். (அ-ம-66)

## ஆக்கிரமிக்கப்பட்ட...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம் காணிகள் விடுவிக்கப்படும் என்ற செய்திகள் பரப்பப்படுவதும், பின்னர் எவ்வித நடவடிக்கையும் இன்றி ஜனாதிபதி திரும்பிச் செல்வதும் வழமையான விடயமாக மாறிவிட்டது. கடந்த காலங்களிலும் இத்தகைய கருத்துக்கள் பரப்பப்பட்டு, வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் வலி.வடக்கு மக்களின் ஏக்கம் தீர்க்கப்படவில்லை.

திஸ்ஸ விகாரை அமைந்துள்ள இடத்தில் 16 தனியார் உரிமையாளர்களுக்குக் காணிகள் உள்ளன. விகாரையின் மேற்குப் பகுதியில், பவானி வீதியோடு இணைந்த 2 ஏக்கர் காணியை விடுவிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு, வேலிகள் அமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், தையிட்டி வடக்கு, கிழக்கு அல்லது தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இணக்கம் பெறப்படவில்லை எனக்கூறி தற்போது அந்த ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இது மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

கடந்த ஜூலை 2ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, நயினாதீவு விகாராதிபதி மற்றும் 16 தனியார் உரிமையாளர்களின் காணிகள் தொடர்பாக 60 நாள்களுக்குள் தீர்வு காண குழு அமைக்கப்பட்டது. ஆனால், பல மாதங்கள் கடந்தும் எவ்வித முன்னேற்றமும் இல்லை.

மூன்று நாள்களுக்கு முன்னர் கொழும்பில் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுடன் நடைபெற்ற கூட்டத்துக்கு 'அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம்' அழைக்கப்பட்டது. ஆனால், காணியின் உண்மையான உரிமையாளர்கள் அழைக்கப்படவில்லை. இதன்போது, காணிகளை வழங்குவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மக்களின் உணர்வுகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிக்க வேண்டும். யாழ்ப்பாணத்துக்கான தனது பயணத்தின் போது, நல்லெண்ண அடிப்படையில் 2 ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

## இலங்கை...

வந்துள்ளார். ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் வைத்தே, 'பொருளாதாரத்தில் இலங்கை பலமடைவதற்கு அனைத்து ஒத்துழைப்பையும் சீனா வழங்கும்' என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரவின் தலைமையின் கீழ், இலங்கை சரியான பாதையில் பயணிக்கின்றது என்றும் சீன வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். அத்துடன், வர்த்தகம், முதலீடு, அபிவிருத்தி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை மேம்படுத்துவது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

'ஒரே சீனா' என்ற கொள்கையை ஆதரிப்பதற்காக, இலங்கைக்கு அமைச்சர் வாங் யி தனது நன்றியையும் தெரிவித்தார். இன்றையதினம் பிரதமர் ஹரிணி, ஜனாதிபதி அநுர ஆகியோருடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## கடற்படையின்...

தேவைக்காக அபகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான அளவீட்டுப் பணிகள் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளை அபகரிப்பதற்கு, கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும், மக்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளும் வெளிப்படுத்திய எதிர்ப்பால் அந்தப் பணிகள் கைவிடப்பட்டிருந்தன.

ஜனாதிபதி அநுர நாளைமறுதினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து, பொங்கல் பண்டிகைகளில் கலந்து கொள்ளவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெறுவரும் நிலையிலேயே, காணிசுவீகரிப்பு முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## ஒரே வாரத்தில்...

ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் உள்ளதாவது:-

சுற்றுலாவிகள் நாட்டுக்கு வருகைதருவது மீண்டும் அதிகரித்துள்ளது. இந்த வருடத்தின் முதலாவது வாரத்தில் மட்டும் 67 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இவ்வாறு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளில் 17 வீதமானவர்கள் இந்தியர்களாகவே உள்ளனர்.

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 லட்சத்து 52 ஆயிரத்து 761 சுற்றுலாவிகள் இலங்கைக்கு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## தமிழ் அரசியற்கைதிகளுடன் ஸ்ரீபவானந்தராஜா எம்.பி.சந்திப்பு

கொழும்பு,ஜன.13

கொழும்பு மகசின் சிறைச்சாலையில், நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்து வரும் தமிழ் அரசியற்கைதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவக் கலாநிதி. ஸ்ரீபவானந்தராஜா கடந்த வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கைதிகள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், கைதிகள் முன்வைத்த கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பித்து, அவற்றுக்குரிய தீர்வு களைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். (க-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணல் விற்பனை/போமிட் போட்டுத் தரப்படும்.

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு.

யாழ் மாவட்டத்திற்கு ரூபா 60,000/= இருந்து..

மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டுத் தரப்படும் ரூபா 35,000/=

தொடர்புகளுக்கு:
**076 324 9977**

(CS 31247) ER


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.08.1943 | 11.01.2026 |

## தருமலிங்கம் சண்முகலிங்கம்

வேலணை மேற்கு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பண்டாரக்குளம் மேற்கு, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட தருமலிங்கம் சண்முகலிங்கம் அவர்கள் 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கந்தசாமி - பாக்கியலட்சுமி தம்பதிகளின் மருமகனும், பவானியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கண்மணி மற்றும் மங்களம், விஜயலெட்சுமி, இலங்கைநாயகி, தர்மராஜா, இரதிதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா, கந்தசாமி, பொன்னுத்துரை, செல்வராஜா, சத்தியதேவி, முத்துலிங்கம், நித்தியானந்தன் மற்றும் சச்சிதானந்தன் (கனடா), சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சஞ்சயன் (லண்டன்), ராஜினி (மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் - யா/போதனா வைத்தியசாலை), சிவாஜினி, (வைத்தியர் - தேசிய வைத்தியசாலை கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், டிலானி (லண்டன்), கார்த்திகேயன் (மருந்தாளர் - யா/போதனா வைத்தியசாலை), மயூரதன் (பொறியியலாளர் - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், யூலியன், நிலோயன், ஏட்ரியன், ஷிருஸ்ரிஹறன், ஹறிணி, டியானா, ஆரவ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 14.01.2026 புதன்கிழமை காலை 08.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**17/15 பண்டாரக்குளம் மேற்கு,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்**

**தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்**

(CS 59448) E

# மரண அறிவித்தல்



## இராஜேஸ்வரி பாலராஜா

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி பாலராஜா அவர்கள் 10.01.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலம் - சுப்பிரமணியம் தம்பதிகளின் மூத்த மகளும், காலம் சென்ற டெஸ்சி பாக்கியம், சின்னத்துரை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை பாலராஜாவின் மனைவியும், ஜெயராஜா (கனடா), குணதேவி (இலங்கை) ஆகியோரின் சகோதரியும், காலம் சென்ற தியாகராஜா, ஜெகசோதி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், தர்மினி, (இலங்கை), வசந்தினி, (இலங்கை), வியேந்தினி (கனடா), சிவானி (சுவிஸ்), ஜராகினி (கனடா), காலஞ்சென்ற முகுந்தன், தாரணி (சுவிஸ்), கீத்தா (அமெரிக்கா) ஆகியோரின் தாயாரும், அமிர்தலிங்கம் - தயாளன் (இலங்கை), ஜெகதீசன் (இலங்கை), அம்பிகாநிதி (கனடா), சாந்தலிங்கம் (சுவிஸ்), லோகநாதன் (கனடா), ஜெயகாந்தன் - ஜெகன் (சுவிஸ்), சிவசுந்தர் (அமெரிக்கா) ஆகியோரின் மாமியாரும், கார்த்திகா, ஆதவன், கௌதமன், பவித்ரா(திவா), அசாந், அஞ்சுதா, விபுஜா, யசாந், சங்கவி, சுபோதன், செந்தூரன், அச்சுதன்(ஆர்த்தி), கரிகரன், கம்சத்துவன் (அனித்தா), காயத்திரி, புருசோத்தமன், மிதுன், சாலினி ஆகியோரின் பேத்தியும், ஜானகி (ஜானு), வெற்றி, இசை, எல்றோய் ஆகியோரின் பூட்டியும், குகன் - குமாரி (கொலன்ட்), இமயகாந்தன் - விஜி (பிரான்ஸ்), வசந்தமலர் - ரஞ்சன்( இலங்கை), பார்த்தீபன் (பிரித்தானியா) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (உடுவில்) நாளை (14.01.2026) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகி பின்னர் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24.03.1936 | 10.01.2026 |

**தகவல்: குடும்பத்தினர்**

**சிங்கம் வீதி,
உடுவில்.**

**வசந்தினி (சுதா) 077 547 4406
ஜெகதீசன் 074 291 3330**

(CR 46884) ER



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org